Silver Jubilee year
1997-2022

# பெரியார் பல்கலைக்கழகம்
# PERIYAR UNIVERSITY
SALEM -636 011, TAMIL NADU, INDIA
NAAC A++ Grade – State University – NIRF Rank'63' ARIIA Rank '10'
Phone: 0427 – 2345766; email: registrar@periyaruniversity.ac.in

முனைவர் P. பிரகாஷ்,
ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்

C.No. PU/R&D/2022-1 நாள்: **29.08.2022**

## சுற்றறிக்கை

பெரியார் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கான முனைவர்பட்ட ஆய்வுக்குழு (Doctoral Committee Meeting) கூட்டங்கள், ஆய்வுச்சுருக்கம் சமர்ப்பிக்கும் போது நடத்தப்பட வேண்டிய Pre-Viva Voce Examination மற்றும் ஆய்வேடு சமர்ப்பித்த பின்னர் நடத்தப்பட வேண்டிய Public Viva Voce Examination ஆகியனவைகளை ஆராய்ச்சி மாணாக்கர் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்வதற்காக பதிவு செய்துள்ள கல்லூரியின் வேலை நாட்களில் மட்டுமே நடத்த வேண்டும். அரசின் பொது விடுமுறை நாட்கள், கல்லூரிகள் அமைந்துள்ள மாவட்டத்தின் ஆட்சியர்கள் அறிவிக்கும் உள்ளூர் விடுமுறை நாட்கள், சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் மேற்காண் கூட்டங்கள் மற்றும் தேர்வுகள் நடத்தக்கூடாது என இதன் வழியாகத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன். அவ்வாறு மேற்காண் நாட்களில் முனைவர்பட்ட ஆய்வுக்குழு (Doctoral Committee Meeting) கூட்டங்கள், Pre-Viva Voce Examination, Public Viva Voce Examination நடத்தப்பட்டால் அவை பல்கலைக்கழக முனைவர் பட்ட விதிமுறைகளின்படி செல்லத்தக்கதல்ல.

மேலும், கோவிட்-19 நோய்த்தொற்றினால் ஏற்படும் தீமைகளை கருத்தில் கொண்டு மேற்காண் கூட்டங்களை இணைய வழியாக நடத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது கோவிட்-19 தொற்றின் தாக்கம் குறைந்து, பொதுமக்கள் அனைவரும் சற்றே இயல்புநிலைக்கு திரும்பியுள்ளதை கருத்தில் கொண்டும், மாணாக்கர்கள் நேரடியாக மேற்காண் தேர்வுகளில் கலந்துகொண்டு தங்களது ஆராய்ச்சி தொடர்பான அறிவார்ந்த விபரங்களை குழுவினரிடமும், தேர்வாளர்களிடமும் எடுத்துரைக்க ஏதுவாக 01.09.2022 முதல் மேற்காண் கூட்டங்கள் மற்றும் வாய்மொழித்தேர்வுகளை சூழ்நிலைகளைப் பொறுத்து நேரடியாகவோ அல்லது இணைய (online) வழியாகவோ நடத்தலாம் எனவும், அவ்வாறு நடத்தப்படும் போது கலந்துகொள்பவர்கள் அனைவரும் உரிய சமூகஇடைவெளியினை பின்பற்றுவதையும், கைசுத்திகரிப்பான் உபயோகிப்பதையும், முகக்கவசம் அணிவதையும் நெறியாளர்கள் உறுதி செய்யுமாறும் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

30/8/2022
ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்

பெறுதல்

1. அனைத்துத் துறைத்தலைவர்கள், பெரியார் பல்கலைக்கழகம்.
2. முதல்வர்கள், பெரியார் பல்கலைக்கழக இணைவு கல்லூரிகள்.
3. இயக்குநர் (பொ), பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி.